பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை - 4
31 12 2025 WEDNESDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ராணுவம் மற்றும் கடற்படைக்கு, 4 ஆயிரத்து 666 கோடி ரூபாய் மதிப்பிலான ஆயுதங்களை கொள்முதல் செய்ய, பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

3. படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சோதனை ஓட்டம், வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. மக்களின் வாழ்க்கையை எளிமையாக்கும் விதமாக, 2025-ம் ஆண்டு நிர்வாக சீர்திருத்தங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்

5. காஸா மீது இஸ்ரேல் படைகள், கடும் தாக்குதல் நடத்தியுள்ளன.

>>>>>>><<<<<<

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, அனைத்து தரப்பினரும் பாடுபட வேண்டும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் கும்லாவில், கார்த்திக் ஜாத்ரா எனப்படும், மாநிலங்களுக்கு இடையிலான கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், பழங்குடியினத்தைச் சேர்ந்த பங்கராஜ் கார்த்திக் ஓரன், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்று புகழாரம் சூட்டினார்.

பழங்குடியினர் அருங்காட்சியகங்கள் மூலம், அவர்களது வீர தீர செயல்பாடுகளை, நாட்டு மக்கள் அறிந்து கொள்ள மத்திய அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பழங்குடியினரின் பங்களிப்புகளை வருங்கால சந்ததியினரும் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<

ராணுவம் மற்றும் கடற்படைக்கு, 4 ஆயிரத்து 666 கோடி ரூபாய் மதிப்பிலான ஆயுதங்களை கொள்முதல் செய்ய, பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, பாரத் ஃபோர்ஜ் மற்றும் P L R நிறுவனங்களிடமிருந்து, 2 ஆயிரத்து 770 கோடி ரூபாய் அளவிற்கு, நவீன ரகத்தைச் சேர்ந்த சுமார் 4 லட்சம் சிறு துப்பாக்கிகள் கொள்முதல் செய்யப்படும்.

இதன்மூலம், ராணுவமும், கடற்படையும், உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட அதிநவீன ஆயுதங்களைக் கொண்டவையாக இருக்கும்.

இதேபோன்று இத்தாலியைச் சேர்ந்த WASS Submarine systems நிறுவனத்திடமிருந்து, கல்வாரி ரக நீர்மூழ்கிக் கப்பலுக்குத் தேவையான 48 கனரக டார்பிடோக்கள், ஆயிரத்து 896 கோடி ரூபாய்க்கு வாங்கப்படும். இவை, நீர்மூழ்கிக் கப்பல்களின் போர்த்திறனை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும்.

இந்த ஆயுதங்களின் வினியோகம், 2028- ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி, 2030-ம் ஆண்டு முற்பகுதியில் முழுமையாக வழங்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சோதனை ஓட்டம், வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுகுறித்த காணொலியை தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், இந்த ரயில் Kota Nagda பகுதியில் மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கி பரிசோதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

அப்போது ரயிலில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் நிரப்பப்பட்ட கண்ணாடி டம்ளர்கள் ஆடாமல் நிலையாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பரிசோதனை, நவீன தொழில்நுட்பத்தை எடுத்துரைப்பதாக உள்ளது என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைத்து, தயாரிக்கப்பட்ட DHRUV – NG ரக ஹெலிகாப்டர் சேவையை சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தொடங்கி வைத்தார்.

பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ஹெலிகாப்டர், இலகு ரக இரட்டை எஞ்சின் பொருத்தப்பட்டதாகும்.

இந்திய வானிலைக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஹெலிகாப்டர், அதிகபட்சமாக மணிக்கு 285 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கக் கூடியது என்று இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஹெலிகாப்டர், 14 பயணிகளை ஏற்றிச் செல்லவும், முக்கிய பிரமுகர்கள் மற்றும் மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்தவும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

மக்களின் வாழ்க்கை மற்றும் பணியாற்றும் சூழலை எளிமையாக்கும் விதமாக, 2025-ம் ஆண்டு, நிர்வாக சீர்திருத்தங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

தமது துறையின் ஆண்டு சாதனைகள் குறித்து, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பணியாளர் நலத்துறை மூலம், இந்த ஆண்டு வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்பட்டதுடன், பொதுமக்கள் குறைதீர்வு நடைமுறைகளைக் கண்காணிக்க, தேசிய அளவிலான புதிய முறை உருவாக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

பணியாளர் நலத்துறை செயலாளர் திருமதி. ரச்சனா ஷா பேசுகையில், இந்த ஆண்டு, மூன்று மெகா வேலைவாய்ப்புத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு, மத்திய அரசின் பல்வேறு துறைகளில், சுமார் ஒன்றரை லட்சம் பேருக்கு, பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

தில்லி யூனியன் பிரதேசத்தில், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து, நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கான சட்டத் திருத்த மசோதாவிற்கு, தில்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த முதலமைச்சர் திருமதி.ரேகா குப்தா, இந்த மசோதா, வரும் 5-ந் தேதி தொடங்க இருக்கும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்படும் என்றார்.

இதன் மூலம், சிறு வழக்குகள் குற்றமற்றவை ஆக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த மசோதா, சட்டமாகி நடைமுறைக்கு வந்த பிறகு, தண்டனைகளுக்கான அபராதத் தொகையை, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை, 10 சதவீதம் அதிகரிக்கவும் வகை செய்யப்பட்டிருப்பதாக, திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

*உத்தரப்பிரதேசத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் அடிப்படையிலான வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 6-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*அம்மாநிலத்தில், இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இதற்கான மாற்றியமைக்கப்பட்ட அட்டவணையை மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. நவ்தீப் ரின்வா அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வாக்காளர் பட்டியல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை, ஜனவரி 6-ஆம் தேதி முதல் பிப்ரவரி 6-ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதன்பின், வரும் மார்ச் மாதம் 6-ந் தேதி வாக்காளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் என்றும் திரு. நவ்தீப் ரின்வா தெரிவித்துள்ளார்.*

>>>>>>><<<<<<

*மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*வேளாண் சாகுபடி பணிகளில் இந்த இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை ஈடுபடுத்த அனுமதி அளிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டம், பொம்மிகுப்பத்தைச் சேர்ந்த விவசாயி தெரிவித்துள்ளார்.*

*(Sound Byte விவசாயி - 35 Sec. )*

>>>>>>><<<<<<

*பெங்களூரு - மங்களூரு ரயில்பாதை முற்றிலும் மின்மயமாக்கப்பட்டிருப்பதாக ரயில்வே தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கர்நாடக மாநிலத்தில் உள்ள மிகவும் சவாலான மலைப் பகுதியான Sakleshpur – Subramanya Road இடையிலான 55 கிலோமீட்டர் தூர ரயில்பாதையை மின்மயமாக்கும் பணிகள் நிறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக, பெங்களூரு - மங்களூரு வழித்தடத்தில், விரைவில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.*

மேலும், கொங்கன் கடலோரப் பகுதிக்கு கூடுதல் ரயில்களை இயக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

இஸ்ரேல் படைகள், காஸா பகுதி மீது கடும் தாக்குதல் நடத்தியுள்ளன.

வடக்கு Rafah மற்றும் Kham Younis பகுதிகளில் உள்ள இடங்களைக் குறிவைத்து, நேற்று நடத்தப்பட்ட இந்த வான் தாக்குதலில், கடும் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் ஏற்பாட்டில், கடந்த அக்டோபர் மாதம் 10-ந் தேதி மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை மீறிய செயல் என்று காஸா அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முன்னதாக, இஸ்ரேல் பிரதமர் திரு.பெஞ்சமின் நெத்தன்யாகு, ஃப்ளோரிடாவில், அமெரிக்க அதிபர் திரு.டோனல்ட்ட் டிரம்பை சந்தித்து, போர் நிறுத்தத்தின் இரண்டாம் கட்டம் குறித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர், அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்பாக, ஹமாஸ் அமைப்பினர், அவர்கள் வசமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

>>>>>>><<<<<<

சீனப்படைகள், தைவானுக்கு எதிராக ராணுவ ஒத்திகையில் ஈடுபட்ட நிலையில், அமெரிக்கா, தனது இரண்டு விமானம் தாங்கி கப்பல்களை, மேற்கு பசிபிக் கடற்பகுதிக்கு அனுப்பியுள்ளது.

இதில், U S S ஆப்ரகாம் லிங்கன் என்ற கப்பல், வழக்கமான நடவடிக்கைகளுக்காக, தெற்கு சீன கடற்பகுதிக்கு சென்றிருப்பதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கப்பலுக்கு ஆதரவாக, U S S Tripoli என்ற கப்பலும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், இது ஜெட் ரக விமானங்கள் இறங்கும் வசதி கொண்டது என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

இலங்கைக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்திய அணி, 7 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.

***>>>>>>END<<<<<<***